**உதவி அமர்வு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி. S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி**
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9–ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.98/2023**

**CNR No. TNMY06-000215-2024**

(சீர்காழி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அவர்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண். 23/2023 ன்படி மேல் விசாரணைக்காக அனுப்பிவைக்கப்பட்டது)

**திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.84/2023**

| வ.எண் | தலைப்பு | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | : | திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.84/2023 |
| 2 to 7 | எதிரிகளின் விபரங்கள் (பெயர், தந்தை பெயர், தொழில், இருப்பிடம் & முகவரி | : | இலக்கியராஜ், வயது 36/2023,<br>த/பெ. கோவிந்தராஜ்,<br>மேலத்தெரு,<br>நாங்கூர், சீர்காழி. |
| 8 | குற்றம் நடைபெற்ற நாள் | : | 26.04.2023 |
| 9 | புகார் கொடுத்த நாள் | : | 27.04.2023 |
| 10 | எதிரியை கைது செய்த நாள் | : | 06.05.2023 |
| 11 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 22.05.2023 |
| 12 | விசாரணை நீதிமன்றம் முதலேற்பு செய்த நாள் | : | 12.03.2024 |
| 13 | சாட்சி விசாரணை தொடங்கிய நாள் | : | 14.10.2025 |
| 14 | சாட்சி விசாரணை நிறைவுற்ற நாள் | : | 26.03.2026 |
| 15 | தீர்ப்பு வழங்கிய தேதி | : | 09.04.2026 |
| 16 | தீர்ப்பின் நகல் வழங்கிய தேதி | : | 09.04.2026 |
| 17 | காலதாமத்திற்கான காரணம் | : | --- |
| காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றசாட்டுகள் | | : | U/S. 294(பி), 352, 307 மற்றும் 506(2) IPC |

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:30 +0530

| | | |
|---|---|---|
| எதிரிகளின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரை பற்றிய விபரம் | : | **முடிவாக, முடிவாக,** எதிரி இத.ச. பிரிவுகள் 294(b), 352, 307 மற்றும் 506(2) ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் **S.C.P. No.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 24.7 செ.மீ. நீளம் கொண்ட துருபிடித்த துணி வெட்டும் கத்திரிகோல் –1 மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.98/2023 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022 ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இவ்வழக்கு 02.04.2026 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுக்காக கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. எஸ்.ஜே. ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

<u>**தீர்ப்புரை**</u>

1. அரசுத்தரப்பு வழக்கானது இவ்வழக்கின் வாதியான தில்லைகரசன் என்பவர் திருவெண்காடு, நாங்கூர் கடைவீதியில் ஸ்ரீதில்லை அடகு கடை வைத்துள்ளதாகவும், கடந்த 14.04.2023 ம் தேதி எதிரியான இலக்கியராஜ் என்பவர் 3.900 கிராம் எடையுள்ள தங்கதாலியை அடகு வைத்து ரூ.11,000/– பெற்று சென்ற நிலையில் கடந்த 26.04.2023 ம் தேதியில் மாலை 16.20 மணிக்கு எதிரியானவர் வாதியின் அடகு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:36 +0530

கடைக்கு வந்து தங்க தாலியை மீட்க வந்தபோது வாதியானவர் ரூ.11,370/– கொடுத்துவிட்டு, மீட்டு கொள்ளுமாறு கூறியதற்கு எதிரியானவர் வாதியை பார்த்து நான் ரூ.11,000/– மட்டுமே கட்டுவேன், மீதி தொகையை கட்டமாட்டேன் குச்சிக்காரி மவனே, தேவுடியா மவனே என்று காமகுரோதமாக திட்டி, வாதியின் கண்ணத்தில் அறைந்தபோது வாதியானவர் பணம் கொடுத்ததால் தான் நகையை திருப்பி தருவேன் என்று கூறியதற்கு எதிரியானவர் பக்கத்து டைலர் கடையில் இருந்து துருப்பிடித்த இரும்பு கத்திரிகோலை எடுத்து உன்னை உயிரோடு விட்டாதானே நீ இப்படி பேசுவ உன்னை கொன்னா தான் சரிபட்டு வரும் என்று சொல்லி இத்தோடு செத்து தொலைடா என்று கொலை செய்யும் நோக்கதோடு கத்திரிகோலால் வாதியின் கழுத்தை நோக்கி குத்த வந்ததாக குறிப்பிட்டு எதிரியின் மீது இதச. பிரிவுகள் 294(பி), 352, 307 மற்றும் 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரி மீது திருவெண்காடு காவல் நிலைய ஆய்வாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. சீர்காழி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கினை தமது கோப்பில் மு.ப.வ.எண்.23/2023 ஆக எடுத்துக்கொண்டு வழக்கில் எதிரி முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன் கீழ் வழங்கி பரிசீலனை செய்கையில் எதிரி மீதான குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றங்களாக இருந்ததால் இவ்வழக்கினை கு.வி.மு.ச. பிரிவு 209(அ)ன்படி மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

3. நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 352, 307 மற்றும் 506(2)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்து காண்பித்து விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். ஆகையால் வழக்கு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:43 +0530

வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 தில்லைக்கரசன் அவரது சாட்சியத்தில் அவர் தற்போது புத்தூரில் வசித்து வருவதாகவும், பைனான்ஸ் நடத்தி வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தான் கூட்டத்தில் இருந்தபோது தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் அதனால் போட்டேன் என்றும், எதற்காக கையெழுத்து போட்டேன் என்றும் அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 கண்ணன் மற்றும் அ.சா.3 கண்ணன் தங்களது சாட்சியத்தில் அவர்கள் தற்போது நாங்கூரில் வசித்து செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நாளில் தாங்கள் ஊரில் இல்லை என்றும் தங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 கழனியப்பன் தனது சாட்சியத்தில் அவர் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 27.04.2023 ம் தேதி காலை 9.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது சீர்காழி தாலுக்கா புத்தூர் குமிளங்காடு கபாலி முதலியார் தெருவை சேர்ந்த ரவிச்சந்திரன் மகன் தில்லைக்கரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 84/2023 U/s. 294(b), 352, 506(ii), IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் அண்ணாதுரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், புகார் அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், இவ்வழக்கின் ஆய்வாளர் அண்ணாதுரை என்பவர்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:48 +0530

இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலு, வீரமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அவைகள் அ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆகவும், சாட்சிகள் தில்லைகரசன், கண்ணன், கண்ணன், மணிகண்டன், ஜெயராமன், பாலு, வீரமணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் சட்டப் பிரிவை மாற்றம் செய்து குற்ற எண். 84/2023 ல் U/s. 294(b), 352, 506(ii), 307 IPC ன் படி பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 தாக்கல் செய்ததாகவும், வழக்கின் எதிரி இலக்கியராஜ் என்பவரை 06.05.2023 ம் தேதி 12.00 மணிக்கு கருவி பஸ் ஸ்டாப் அருகே குற்ற காரணம் கூறி கைது செய்தும், கைது செய்த விபரத்தை அவரது உறவினர்களுக்கு தெரியபடுத்தியும், எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், சாட்சிகள் முருகவேல், கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானாக முன் வந்து கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூல்தை பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்து 24.7 செ.மீ நீளமுள்ள துருபிடித்த துணி வெட்டும் கத்தரிகோல் ஒன்று மறைத்து வைத்திருந்ததை எடுத்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றியுள்ளதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ.9 ஆகவும், சாட்சிகள் முருவேல் கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றதாகவும், இவ்வழக்கில் காயம் பட்ட சாட்சி தில்லைகரசன் என்பவரை 08.05.2023 ம் தேதி மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், வழக்கு பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கின் புலன் விசாரணையை இத்துடன் முடித்து 11.11.2020 ம் தேதி எதிரிகள் மீது ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் U/s. 294(b), 352, 506(ii), 307 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:54 +0530

9. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன்படி கேள்வி எழுப்ப எதிரி அவற்றை பொய் சாட்சிகள் என மறுத்தும், வழக்கு குறித்து பொய் வழக்கு என தெரிவித்தும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென தெரிவித்தனர்.

10. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை**

எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 352, 307 மற்றும் 506(2)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**11. தீர்வு:–**

அரசுத்தரப்பு வழக்கானது இவ்வழக்கின் வாதியான தில்லைகரசன் என்பவர் திருவெண்காடு, நாங்கூர் கடைவீதியில் ஸ்ரீதில்லை அடகு கடை வைத்துள்ளார் என்றும், கடந்த 14.04.2023ம் தேதி எதிரியான இலக்கியராஜ் என்பவர் 3.900 கிராம் எடையுள்ள தங்க தாலியை அடகு வைத்து ரூ.11,000/– பெற்று சென்ற நிலையில் கடந்த 26.04.2023ம் தேதியில் மாலை 16.20 மணிக்கு எதிரியானவர் வாதியின் அடகு கடைக்கு தங்க தாலியை மீட்க வந்தபோது வாதியானவர் ரூ.11,370/– கொடுத்துவிட்டு, மீட்டு கொள்ளுமாறு கூறியதற்கு எதிரியானவர் வாதியை பார்த்து நான் ரூ.11,000/– மட்டுமே கட்டுவேன், மீதி தொகையை கட்டமாட்டேன் என்று காமகுரோதமாக திட்டி, வாதியின் கண்ணத்தில் அறைந்தபோது வாதியானவர் பணம் கொடுத்தால் தான் நகையை திருப்பி தருவேன் என்று கூறியதற்கு எதிரியானவர் பக்கத்து டைலர் கடையில் இருந்து துருப்பிடித்த இரும்பு கத்திரிகோலை எடுத்து உன்னை உயிரோடு விட்டாதானே நீ இப்படி பேசுவ உன்னை கொன்னா தான் சரிபட்டு வரும் என்று சொல்லி இத்தோடு செத்து தொலைடா என்று கொலை செய்யும் நோக்கதோடு கத்திரிகோலால் வாதியின் கழுத்தை நோக்கி குத்த வந்ததாக எதிரியின் மீது இதச. பிரிவுகள் 294(பி), 352, 307 மற்றும் 506(2) ன் கீழ் எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:25:00 +0530

ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய நீதிமன்ற சாட்சியத்தில் தான் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தான் கூட்டத்தில் இருந்த போது தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் அதனால் அ.சா.1 கையெழுத்து போட்டதாகவும், அந்த கையெழுத்தை எதற்காக போட்டேன் என்றும், அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். இவ்வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 மற்றும் அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களுடைய சாட்சியத்தில் தாங்கள் நாங்கூரில் வசித்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நாளில் தாங்கள் ஊரில் இல்லை என்றும், தங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளனர்.

13. இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட திருவெண்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அ.சா.4 தம்முடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரரிடமிருந்து புகார் அ.சா.ஆ.2 யை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்தது குறித்தும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்தது குறித்தும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் சான்று பொருளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 தயார் செய்து படிவம் 95 அ.சா.ஆ.9 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தது குறித்தும், பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 தயார் செய்தது குறித்தும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தம்முடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இவ்வழக்கை தான் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றும், தன் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:25:06 +0530

14. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பரிசீலனை செய்கையில் புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார். அ.சா.1 தம்முடைய சாட்சியத்தில் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்தை எதற்காக போட்டேன் அதில் எழுதியுள்ள விவரம் என்ன என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் குற்றச்சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூப்பிக்கும் வகையில் அமையவில்லை. அ.சா.4 ன் சாட்சியம் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது. எனவே இவ்வழக்கின் புகார்தாரரின் சாட்சியம் அரசு தரப்புக்கு ஆதரவாக அமையாமல் அ.சா.1 பிறழ்சாட்சியாகியுள்ளார் என்பதை பரிசீலனை செய்தும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என்பதாலும், அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எதிரியை இவ்வழக்கின் குற்ற சம்பவத்தோடு தொடர்பு படுத்த இயலாது என்று தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து ஆஜர் எதிரி மீதான இத.ச. பிரிவுகள் 294(b), 352, 307 மற்றும் 506(2) ன் கீழுான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்க தவறியுள்ளதாக தீர்மானித்து ஆஜர் எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, ஆஜர் எதிரியை இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

15. **முடிவாக,** எதிரி இத.ச. பிரிவுகள் 294(b), 352, 307 மற்றும் 506(2) ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் **S.C.P. No.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 24.7 செ.மீ. நீளம் கொண்ட துருபிடித்த துணி வெட்டும் கத்திரிகோல் –1 மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:25:13 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:25:19 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சீர்காழி.

**<u>சாட்சிகள் சான்றாவணங்கள் பட்டியல்</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. தில்லைகரசன் |
| அ.சா.2 | திரு. கண்ணன் த/பெ. அபுல் நாயுடு |
| அ.சா.3 | திரு. கண்ணன் த/பெ. சிங்காரம் |
| அ.சா.4 | திரு. கழனியப்பன் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | புகார் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.9 | படிவம் 95 |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 24.7 செ.மீ. நீளம் கொண்ட துருபிடித்த துணி வெட்டும் கத்திரிகோல் –1 |

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** –இல்லை–

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:25:26 +0530

உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.

நேரிய /வரைவு தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண்.98/2023
நாள் . 09.04.2026